# அலை கடல் ஒளிர் மீனே - செல்வ

அலை கடல் ஒளிர் மீனே - செல்வ
ஆண்டவர் தாயாரே ( 2 )
நிலை பெயராக் கன்னி - மோட்ச
நெறிக் கதவே வாழி

**1**
வானவர் கபிரியியேலின் - தூய
மங்கள மொழியேற்பாய் ( 2 )
ஞான சமாதான - வழிநாம்
நடந்திட தயை செய்வாய்

**2**
பாவ விலங்கறுப்பாய் - குருடர்
பார்த்திட ஒளி விடுப்பாய் - ( 2 )
சாவுறும் தீமையெல்லாம் - நீங்க
சகல நன்மை அளிப்பாய்

**3**
தூயவராய் நடக்க - செய்வாய்
சோர்விலா வழி சேர்ப்பாய் ( 2 )
சேயனுன் யேசுவை நாம் - நித்தம்
நேசிக்க வரம் செய்வாய்